Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
"With God all things are possible"
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular letter No/GR/30/2021**

# ஆயர் சுற்றுமடல்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

உயிர்ப்பின் நான்காம் ஞாயிற்றுக்கிழமையை திருச்சபையில் இறையழைத்தலுக்கான உலகளாவிய செப நாளாக கொண்டாட திருத்தந்தை அறிவித்திருப்பது நாம் தெரிந்த ஒன்றே. உலகளாவிய இறையழைத்தல் செப தினம் 1963 -ஆம் ஆண்டு திருத்தந்தை ஆறாம் பவுலால் தொடங்கப்பட்டது.

தக்கலை மறைமாவட்டம் வெள்ளி விழா கொண்டாடும் இவ்வாண்டு, இழையழைத்தல் நாள் கொண்டாட்டம் நம்மை பொறுத்தவரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. குருத்துவ துறவற வாழ்விற்கு இறையழைத்தல்களை ஊக்கப்படுத்த வேண்டியது இக்காலக்கட்டத்தின் மிகப்பெரிய தேவையாக இருக்கிறது. இறையழைத்தலின் விதைகளை கடவுள் தான் ஒருவரிடம் விதைக்கிறார்.

இறையழைத்தலை உய்த்துணரச் செய்யவும், வளரச் செய்யவும் பெற்றோருக்கும் குடும்ப சூழ்நிலைகளுக்கும் முழுமையான பங்கு உண்டு. அவற்றில் பெற்றோரின் ஊக்கப்படுத்தலும், செபமும், வாழ்க்கை முன்மாதிரியும் மிக முக்கியமானவை. ஒழுங்கான செப சூழலும், திருச்சபையுடனான அன்பும் பங்கு ஆலயத்தில் முழுமையான ஈடுபாடும் கொள்கின்ற குடும்பங்களிலிருந்து தான் இறையழைத்தல்கள் உருவாகின்றன.

இறையழைத்தல்களை உய்த்துணரவும் ஊக்கப்படுத்துவதற்கான பொறுப்பு திருச்சபைக்கு உண்டு. குறிப்பாக பங்கு தந்தையர்களின் உன்னிப்பான கவனமும், விருப்பமும், ஒத்துழைப்பும் மிகவும் தேவையானது என்று நினைவுப்படுத்துகிறேன்.

அர்ப்பண வாழ்வில் அருட்சகோதரிகளும் இழையழைத்தலை ஊக்கப்படுத்த மிகவும் முயற்ச்சி செய்ய வேண்டும். அருட்சகோதரிகளின் செபமும் குழந்தைகளுக்கு அவர்கள் வழங்குகின்ற பயிற்சிகளும் இறையழைத்தலின் வளர்ச்சிக்கு மிகவும் உதவிடும் என்பதையும் நான் எடுத்துரைக்கின்றேன். குருமடங்களிலும் மற்றும் பயிற்சி கூடங்களிலும் பணி புரிகின்ற பயிற்சியாளர்களாகிய அருட்தந்தையர்களுக்கு இழையழைத்தலை உய்த்துணரச் செய்ய நடைமுறையிலும் ஆக்க பூர்வமாகவும் செய்திட கடமையுண்டு. இழையழைத்தலின் வளர்ச்சிக்கு பீடச்சிறுவர்களின் உருவாக்கமும், மிஷன் லீக் திருத்தொண்டு இயக்கத்தினுடைய சிந்தனையும் அதிகமாக கவனிக்கப்பட வேண்டிய நிலைகளாகும்.

குருத்துவ துறவற வாழ்விற்கான அதிகமான இறையழைத்தல்கள் நமது மறைமாவட்டத்திற்கு தேவைப்படுகிறது. குருத்துவத்திற்கான அழைப்பில் நமது மறைமாவட்டத்தில் கவனிக்கத்தக்க குறைவு குறிப்பிட்ட காலத்திற்குள் வந்திருக்கிறது என்பதை மிக்க வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முப்பதற்கு மேலாக குரு மாணவர்கள் பயின்றிருந்த நமது இளம் குரு மடத்தில் இப்போது விரலால் எண்ணக்கூடிய அளவு மட்டுமே குரு மாணவர்களே உள்ளனர். மறைமாவட்டத்தின் இதயம் என்று சிறப்பிக்கப்படும் இளம் குருமடத்தின் இருத்தலையே பாதிக்கின்ற அளவுக்கு குருத்துவ இறையழைத்தலில் குறைவு வந்திருக்கிறது.

தக்கலை மறைமாவட்டத்திற்கு பணிபுரிய புதிய எட்டு மாவட்டங்கள் கூடுதலாக கிடைத்திருக்கின்ற இச்சூழலில் திருத்தொண்டு உணர்வும், தீவிர ஆர்வமும் உள்ள குருக்களுடையவும் துறவறத்தாரருடையவும் தேவை உண்டு. “அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு” என்ற நிலை இங்கு தீவிரமடைந்திருக்கிறது. பெண் குழந்தைளின் இறையழைத்தலிலும் பெரிய குறைவு ஏற்பட்டிருப்பதை தீவிரமாக சிந்திக்க வேண்டும். மறைமாவட்டத்தின் பல இடங்களிலும் அருட்சகோதரிகளின் போற்றத்தக்க பணிவிடை தொடர இயலாத நிலையில் அவர்களின் அழைத்தலில் எடுத்துச் சொல்லும் வண்ணம் குறைவு வந்திருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் ஒன்றிணைந்து செபிக்கவும் ஒத்துழைக்கவும் வேண்டும். அருட்தந்தையர்களும் துறவறத்தாரும் பெற்றோரும் உண்மையாக முயற்சி செய்து மறைமாவட்டத்தின் திருத்தொண்டு பணியை வசப்படுத்த வேண்டும் என்று நான் நினைவூட்டுகிறேன்.

இறையழைத்தலை புறக்கணிப்பதும் ஊக்கப்படுத்தாமலிருப்பதும் நிராகரிப்பதும் இறைவனுக்கு எதிராக செய்கின்ற பெரிய தவறாகும். இறையழைத்தல் பெறுபவர்

எளிமையுடனும் நன்றி உணர்வுடனும் அதை ஏற்றுக் கொள்ளவும் அதனுடன் நம்பிக்கை கொள்ளவும் வேண்டும். உலகத்தின் கவர்ச்சிகரமான அழைத்தலுக்கிடையே இறைவனின் அழைத்தலின் குரலும் நன்மையும் உய்த்துணர்ந்து சரியான மறுபதில் கொடுக்க திருச்சபையர்கள் தயாராக வேண்டும். “இதோ அடியேன், என்னை அனுப்பும்” என்ற எசாயா இறைவாக்கினரைப் போல சொல்ல முடிவதுதான் உண்மையான இறை அழைத்தல். பெற்றோருடையவும், பங்கு தந்தையர்களுடையவும் உண்மையான கவனமும் ஆர்வமும் இக்காரியத்தில் இருக்க வேண்டுமென்று நினைவு படுத்துகிறேன்.

புனித சூசையப்பருக்காக அர்ப்பிக்கப்பட்ட இந்த ஆண்டு இறையழைத்தலுக்கான உலகளாவிய செப நாளின் செய்தியில் புனித சூசையப்பரின் மாதிரியை பின்பற்ற மூன்று முறைகளை திருத்தந்தை பிரான்சிஸ் பயன்படுத்துகிறார். கனவுகள், பணிவிடை, நம்பிக்கை, கடவுளுக்கு நம்மை பற்றிய கனவுகள் செயலாக்கம் பெற நாம் அனைவரையும் குறிப்பாக அழைத்தலை உய்த்துணர குழந்தைகளுக்கும் இறைஞர்களுக்கும் புனித சூசையப்பர் உதவுவாராக. நம்பிக்கைக்குரிய வாழ்வோடு ஆண்டவருக்கு ஒப்புதல் அளித்து அவருக்கு பணி செய்ய அவர் நம்மை தகுதியுடையோர் ஆக்குவாராக. ஏப்ரல் 25-ம் தேதி ஞாயிறு இறையழைத்தல் செப நாளாக கொண்டாட மறைமாவட்ட இறையழைத்தல் இயக்குனரகத்திலிருந்து கிடைக்கின்ற வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டும். இழையழைத்தலின் பாதுகாவலராக புனித சூசையப்பர் அவரின் தந்தைக்குரிய இதயத்தோடு உங்களையும் சேர்த்து அணைப்பாராக.

**பொது நிலையினர் பணிக்குழு :**

திருச்சபையின் மீட்பு பணியோடு இணைந்து அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஓர் அமைப்பே கத்தோலிக்க காங்கிரஸ். சீரோ மலபார் திருச்சபையினரின் அரசியல் பொருளாதார சமூக சமய மேம்பாடு, உள்ளார்ந்த எழுச்சி ஆகிய இலக்குகளோடு இது தொடங்கப்பட்டது. நமது மறைமாவட்டத்தில் இது பொதுநிலையினர் பணிக்குழு என அழைக்கப்படுகிறது. உறுதியான சமுதாய அடிப்படை சிந்தனைகளை வழங்கிடவும் நம்பிக்கை வாழ்வில் நிலைநிற்கவும், சமுதாய பார்வையுள்ள பொதுநிலையினரை உருவாக்குவதுமே இவ்வமைப்பின் நோக்கமாகும். நம் மக்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளவும் ஒருவருக்கொருவர் உதவி செய்யவும்

ஒன்றித்த ஆற்றல் பெறுவதற்கானதுமே இவ்வமைப்பு. நமது மறைமாவட்டத்திலுள்ள அனைத்து அமைப்புகளோடும் தோளோடு தோள் கொடுத்து செயல்பட இவ்வமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. நமது சூழலுக்கேற்ப நமது செயல்களை திட்டமிட்டு நமது பொருளாதார நிலையை மேம்படுத்தவும் நம்மவர்க்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் பாதுகாப்பான வளமான எதிர்காலத்தை உருவாக்கவும் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்கள் மூலம் நல்ல செயல்திட்டங்களை உருவாக்கவும் இவ்வமைப்பு வழி யாவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

நமது மறைமாவட்டத்தில் பொதுநிலையினர் பணிக்குழுக்கள் மறைவட்டங்கள் அளவிலும் மறைமாவட்ட அளவிலும் ஏற்படுத்தப்பட்டு செயல்படுகிறது. திரு. தனசிங் அவர்கள் (வாறுதட்டு) மறைமாவட்ட தலைவராக செயல்படுகிறார். இப்பணியினை பங்கு அளவில் தொடர நமது மறைமாவட்டத்திற்குட்பட்ட அனைத்து பங்குகளிலும் இப்பணிக்குழுவின் அலகுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். எனவே நீங்கள் பங்கு தந்தையோடு இணைந்து உங்கள் பங்குகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளோடு ஒரு குழுவை ஏற்படுத்தி அக்குழுவிற்கு தலைவர் துணைத்தலைவர் செயலர் பொருளர் ஆகியோர்களை தேர்ந்தெடுத்து பங்கு தந்தையிடம் பெயர்களை 02-05-2021 - க்குள் ஒப்படைக்கும் படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இறைவன் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் உங்கள் பணிகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
16.04.2021

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

✞ **மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

இச்சுற்றுமடலை அனைவரது புரிதலுக்காக 18 / 04/ 2021 அன்று திருப்பலியிடையே அனைத்து ஆலயங்களிலும் வாசிக்கவும்.